**செய்தி வெளியீடு எண்: 492** **நாள்: 14.08.2019**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (14.8.2019) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில், திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டரங்கில் 6 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒளிரும் மின்விளக்கு வசதிகளுடன் கூடிய செயற்கை இழை ஓடுதளப் பாதையை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 2 கோடியே 65 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு வீரர்களுக்கான விடுதிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி வாகை சூடும் வகையில், அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், அவர்கள் தங்கி பயிற்சி பெற விளையாட்டு விடுதிகள் ஏற்படுத்துதல், கிராமப்புர விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், மாவட்ட விளையாட்டு மைதானங்களை மேம்படுத்துதல், பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்குவித்தல், உயரிய ஊக்கத் தொகை வழங்குதல், சர்வதேச அளவில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்களுக்கு நிதியுதவி அளித்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், ஒரு உள் விளையாட்டரங்கம் மற்றும் ஒரு நீச்சல் குளம் அமைக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த வகையில், திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டரங்கில், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுடன் 6 கோடியே 69 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள ஒளிரும் மின்விளக்குகள், நீர்தெளிப்பான்கள் மற்றும் வடிகால் அமைப்பு போன்ற வசதிகளுடன் கூடிய செயற்கை இழை ஓடுதளப்பாதையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில், வளைகோல்பந்து பயிற்சி பெறும் கல்லூரி மாணவர்களுக்காக 1 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மாணவர்கள் தங்கும் அறைகள், சமையல் அறை, உணவு அருந்தும் கூடம், கழிவறை, குளியலறை, பயிற்றுநர் அறை, காப்பாளர் (Care Taker) அறை, படிக்கும் அறை, உடற்பயிற்சி கூடம்,

பார்வையாளர் கூடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள சிறப்பு விளையாட்டு விடுதிக் கட்டடம்;

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கில் 55 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதிக் கட்டடம்; மதுரை மாவட்ட விளையாட்டரங்கில் உள்ள விளையாட்டு விடுதிக் கட்டடத்தில் 97 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் விடுதிக் கட்டடம்;

என மொத்தம் 9 கோடியே 34 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

ஆஸ்திரேலியா நாட்டின் கான்பெர்ரா நகரில் கடந்த 23.11.2018 முதல் 28.11.2018 வரை நடைபெற்ற காமன்வெல்த் சீனியர் மற்றும் வெட்ரன் வாள்சண்டை வாகையர் போட்டிகளில் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வி சி.ஏ. பவானிதேவி மற்றும் திரு.கே.பி.ஜிஷோ நிதி ஆகியோருக்கு உயரிய ஊக்கத் தொகையாக தலா 10 லட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 20 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், கத்தார் நாட்டின் தோஹா நகரில் கடந்த 21.4.2019 முதல் 24.4.2019 வரை நடைபெற்ற 2019ஆம் ஆண்டிற்கான ஆசிய தடகள வாகையர் போட்டிகளில், ஆடவர் மற்றும் மகளிர் கலப்புப் பிரிவில் 4 x 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு.எஸ்.ஆரோக்கிய ராஜீவ் அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகையாக 5 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு.சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**